சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

அழகஞ் செட்டியார் காளியார் பொதுப்படைப்பு பரிபாலன சபை

பள்ளத்தூர்.

சபையின் ஞாபகக் குறிப்பும் விதிகளும்.

6—7—60ல் பதிவு செய்யப்பெற்றது.

பதிவு எண் S. No. 13 of 1960.

★

அலுவலகம் :

அழ. ராம. சத்திரம்

பள்ளத்தூர்.

30/2

Certificate of Registration of Societies

ACT XXI OF 1860.

As amended by Madras Act No. XXIV of 1954.

S. No. 13 of 1960.

I hereby certify that Alagan Chettiar Kaliyar Podupadaippu Paripalana Sabai, Pallathur has this day been registered under the Societies' Registration Act 1860. Act XXI of 1860 as amended by Madras Act No. XXIV of 1954.

Given under my hand at Pudukkottai this Fourteenth day of July One thousand nine hundred and sixty.

(Sd.) SYED ALI AHMED
Registrar, Pudukkottai District.

அழகஞ் செட்டியார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபை, பள்ளத்தூர்.

சபையின் மெமோராண்டம்.

I. சொசைட்டியின் பெயர்.

"அழகஞ் செட்டியார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபை, பள்ளத்தூர்."

II. நோக்கங்கள்.

1. அழகஞ் செட்டியாருக்கும் காளியாருக்கும் பொதுப் படைப்பு படைத்தல், வணங்கல், அன்னமிடல்.

2. அவர்கள் நினைவுக்கு அறிகுறியாகவும் இக்குலத்தவரின் நன்மைக்காகவும் அறங்கள் செய்தல், அறநிலையங்கள் ஏற்படுத்துதல்.

3. இச்சபையின் வளர்ச்சிக்கென,

அ. சொத்துக்கள் வாங்குதல்.

ஆ. அந்த சொத்துக்களை அவ்வப்போதுள்ள நிலையைப் பொறுத்து விருத்தி செய்யவும், வாடகைக்கு விடவும் விற்கவும் ஏற்பாடு செய்தல்.

III. இந்த சபையின் தற்கால விதிகள் கட்டுப்பாடுகளின்படி அமைக்கப்பெற்று சபையின் பொறுப்பு அடைந்திருக்கும் செயற் குழு உறுப்பினர்களின் பெயர், தொழில், விலாசம் முதலியன.

எண்	பெயர்	பதவி	தொழில்	ஊர்
1.	சொ. மு. அ மெ. ராம. ராமசாமி செட்டியார்,	தலைவர்,	பாங்கர்,	பள்ளத்தூர்.

2. மு. மு. சொ. மு. ராமநாதன் செட்டியார், பாங்கர், பள்ளத்தூர்.

3. மு. அ. அருணாசலம் செட்டியார், பாங்கர், பள்ளத்தூர்.

4. சொ அள. அள, சோ அழகப்ப செட்டியார், பாங்கர், பள்ளத்தூர்.

5. சொ வி. சொ. சொக்கலிங்கம் செட்டியார், பாங்கர், பள்ளத்தூர். (பள்ளத்தூர் அள. ராம. சத்திரம், விசாரணைதார் காரியதரிசி.)

6. அள. சுப. சுப்பையா செட்டியார், பாங்கர், கடியாபட்டி.

7. உ. மு. உ. மு. முத்து வீரப்ப செட்டியார், பாங்கர், கடியாபட்டி.

8. ராம. செ. செல்லப்ப செட்டியார், பாங்கர், கொத்தமங்கலம்.

9. முரு. க அருணாசலம் செட்டியார், பாங்கர், பலவான்குடி.

10. வீர. சிதம்பரம் செட்டியார், பாங்கர், கோட்டையூர்.

11. அ. சு. பழ. வீர. ராமசாமி செட்டியார், பாங்கர், புதுவயல்.

12. அழ. கரு காசி விஸ்வநாதன் செட்டியார், பாங்கர், தேவகோட்டை, காரைக்குடி.

IV. இதனடியில் கையொப்பமிட்டுள்ள அழகஞ் செட்டியார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபையின் தற்கால செயற் குழு உறுப்பினர்களாகிய நாங்கள் சொசைட்டி ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட் ஆப் 1860ன்படி மேலே சொல்லிய சபையை ஒரு சங்கமாக பதிவு செய்து கொள்ள ஒப்புக்கொள்ளுகிறோம்.

கையொப்பம். பதிவு. தேதி.

1. சொ. மு. அ. மெ. ரும. ராமசாமி செட்டியார், தலைவர், 6—7—1960.

2. வீர. சிதம்பரஞ் செட்டியார், உறுப்பினர், 6—7—1960

3. உ. மு. உ. மு. முத்து வீரப்ப செட்டியார், உறுப்பினர், 6—7—1960.

4. அழ. சுப. சுப்பையா செட்டியார், உறுப்பினர், 6—7—1960.

5. அ. சு. பழ. வீர. ராமசாமி செட்டியார், உறுப்பினர், 6—7—60.

6. ருமெ. செ. செல்லப்ப செட்டியார், உறுப்பினர், 6-7-60

7. சொ. வி. சொ. சொக்கலிங்கம் செட்டியார், காரிய தரிசி, 6—7—1960.

சாட்சிகள் :

1. S. M. A M. AR. Ramasamy Son of Arunachalam Chettiar, Banker, Pallatur, 6—7—1960.

2. S A RM. Kadiresan Son of Ramanathan Chettiar, Banker, Pallatur, 6—7—1960.

ஊர் : பள்ளத்தூர் தேதி : 6—7—1960.

அழகஞ் செட்டியார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபை, பள்ளத்தூர்.

சொசைட்டியின் விதிகள்

I. கொள்கைகள்.

மெமோராண்டத்தில் கண்டவை.

II. அங்கத்தினர்கள் தகுதி.

இராமநாதபுரம் மாவட்டம் பள்ளத்தூர், கொத்தமங்கலம், கோட்டையூர், புதுவயல், பலவான்குடி, தேவகோட்டை, காரைக்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கடியாபட்டி ஆகிய ஏழு ஊர்களிலிருக்கும் இரணியூர் கோவில் புள்ளிகளில் அழகஞ் செட்டியார் காளியார் படைப்பைச் சார்ந்த நாட்டுக்கோட்டை செட்டியார் தனவணிகக் குலத்தவர் யாவரும் இதில் உறுப்பினர்களாவார்கள்.

(அ) தேவகோட்டை என்பது தேவகோட்டையும், காரைக்குடியும் சேர்ந்தது. இந்த விதிகளில் இந்த செயல்களுக்கு ஒரு ஊராகக் கருத வேண்டும்.

III. சந்தா விபரம்.

உறுப்பினர்கள் பொதுச் சபையார் விதித்த வரியைக் கொடுக்க வேண்டும்.

உறுப்பினர்களின் சொந்தக்காரர்கள் யாவரும் அழகஞ் செட்டியார் காளியாரை வந்து வணங்க உரிமை உண்டு.

புள்ளி :

மணமான கணவனும், மனைவியும் சேர்ந்தாவது, மணமான ஆணாவது, தாயுடன் சேர்ந்த குழந்தையாவது, தாய் தகப்பன் இல்லாத குழந்தையாவது ஒரு புள்ளி அல்லது உறுப்பினராவர்.

உறுப்பினர்களின் வாக்குரிமை.

வயது வந்த ஆண்களுக்கு மட்டும் உண்டு.

வரி.

(அ) பொதுச் சபையினர் புள்ளி வரி விதிக்கலாம்.

(ஆ) பொதுச் சபையார் படைப்புக் காலங்களில் அரிசி, காணிக்கை, பொருள்கள் வசூல் செய்யலாம்.

ஷ படைப்புக்கு பிற்பட்டு 3 மாதத்திற்கு மேல் சந்தா செலுத்தாதவர்களுக்கு ஓட்டு உரிமை கிடையாது. அவர்கள் அங்கத்தினர்களாக கருதப்படமாட்டார்கள்.

IV. பொதுச் சபை.

(1) எல்லாப் புள்ளிகளும் பொதுச் சபையின் உறுப்பினர்கள்.

(2) பொதுச் சபைக்குப் புதிய சட்ட திட்டங்களைச் செய்யவும், ஏற்கனவே இருக்கும் விதிகளை மாற்றவும், ரத்து செய்யவும் அதிகாரம் உண்டு.

(3) சாதாரணப் பொதுச்சபையின் கூட்டத்திற்கு குறைந்தது ஊருக்கு ஒருவரும் மொத்தத்தில் 20 பேரும் இருக்க வேண்டும்.

(4) சாதாரணப் பொதுக்கூட்டத்திற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் எல்லா உறுப்பினர்களுக்கும் கூட்ட நாள், காலம், சிந்தனைக்கு வரவேண்டிய விஷயங்கள் முதலியவைகளைக் குறிப்பிட்டு கூட்ட அறிவிப்பு அனுப்ப வேண்டும்

(5) ஆண்டிற்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் சாதாரண பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்பெற வேண்டும்.

(6) மேல்கண்ட சாதாரணப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஒவ்வொரு வருடம் பங்குனி மாதம் வரை முடிந்த வரவு சிலவுக்

கணக்கு, கையிருப்பு முதலியவற்றை சபையின் கணக்குகளை பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளரால் (Auditor) சரிபார்க்கப்பெற்று எழுதிய அறிக்கையையும் ஆட்சிக் குழுவின் அறிக்கையையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

(7) அடுத்துவரும் ஆண்டுக்குச் சபையின் கணக்கு ஆய்வாளரை அமர்த்தி அதாவது ஊதியம் திட்டம் செய்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு 4 வருடங்களுக்கு ஒரு முறை ஆட்சிக் குழுவினரை தேர்ந்து எடுக்கவேண்டும்.

(9) இந்த சபைக் கூட்டத்திற்கு ஆட்சிக் குழுவின் தலைவரும், அவரில்லாதபோது துணைத் தலைவரும் தலைவராய் அமற வேண்டும். இவ்விருவரும் இல்லாத போது கூடியுள்ள உறுப்பினர்களில் எவரேனும் ஒருவரை பொதுச்சபை தேர்ந்து எடுத்து அந்த கூட்டத்தை நடத்தலாம்.

(10) பொதுச்சபைக் கூட்டத்திற்கு வந்திருக்கும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குரிமையுண்டு.

(11) பொதுச் சபையின் முடிவுற்கு வரும் பொருள்கள் சபைக் கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களின் பெருவாரியான (Majarity) வாக்குகளால் முடிவு செய்யப்பெற வேண்டும். ஒரு பொருளைப்பற்றி வாக்குகள் ஒரே அளவாக இருந்தால் அக்கூட்டத் தலைவர் தலைமை நிலைக்காக உரிய ஒரு கூடுதல் வாக்கைக் கொண்டு தலைவர் அதனை முடிவு செய்யலாம்.

(12) பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பெறும் முடிவுகள் அவ்வப்போது நிகழ்ச்சிக் குறிப்பில் எழுதப்பெற்று பொதுச்சபைக் கூட்டத் தலைவரால் இறுதியில் கையெழுத்துச் செய்யப்பெறவேண்டும்.

(13) கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரிடமும் அதற்கென வைக்கப்பெற்றிருக்கும் தனிப் புத்தகத்தில் கையெழுத்து வாங்கப்பெறவேண்டும்.

(14) தலைவர் தாமாகவோ அல்லது குறைந்த அளவு ஏழு ஆட்சிக்குழு உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரிலோ அல்லது இருபது உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரிலோ எப்பொழுது வேண்டுமானாலும் பொதுச்சபைக் கூட்டத்தை கூட்டலாம். இவ்வகைக் கூட்டங்களுக்குப் பொதுச்சபை 4-வது பாராவில் கண்டபடி அறிவிப்பு அனுப்பவேண்டும்.

V. ஆட்சிக்குழு.

(1) ஒவ்வொரு ஊரிலும் ஆட்சிக்குழுவிற்கு குறைந்த பட்சம் ஒரு முகவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒரு ஊரில் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 30 புள்ளிக்கு அதிகமாக இருந்தால் ஒவ்வொரு 30 புள்ளிக்கு ஒருவர் முகவர் விதமும் அதற்குமேல் இருக்கும் எண்ணிக்கையில் உபரியாக உள்ள 20 அல்லது அதற்குமேல் உள்ளதற்கு ஒரு முகவரும் தேர்ந்தெடுக்கப்பெறவேண்டும். இருபதுக்கு குறைந்ததற்கு முகவர் நிலை கிடையாது. தேவகோட்டையும் காரைக்குடியும் சேர்ந்து ஒரு ஊராகக் கருதப்படும். உபரியாக பள்ளத்தூர் அள. ராம. சத்திரத்தில் அவ்வப்போதுள்ள விசாரணைதாரரை ஒரு நிலையான ஆட்சிக்குழுவின் முகவராக (Ex. Officio Member)ச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(2) இச்சபைக்கு இப்போது 12 முகவர்கள் கொண்ட ஓர் ஆட்சிக்குழு இருந்துவரும். இந்த ஆட்சிக்குழு முகவர்கள் தங்களுக்குள்ளே ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர் இவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

(3) பள்ளத்தூர் அள. ராம. சத்திரத்தில் அவ்வப்போதுள்ள விசாரணைதாரரே சபையின் நிலையான செயலாளராவர். செயலாளரே பொக்கிஷதாரும் ஆவர்.

(4) சபையின் மேலே குறிப்பிட்டுள்ள ஆட்சிக்குழு முகவர்கள் அனைவரும் ஒவ்வொரு நான்கு ஆண்டு காலத்திற்கு அலுவல் ஆற்றுவார்கள். அவர்களே மறுபடியும் தேர்ந்தெடுக்கப் பெற உரிமை உள்ளவர்கள்.

(5) மேலே கண்ட நான்கு ஆண்டுகள் முடிவதற்கு முன்பே ஒவ்வொரு ஊரிலுள்ள உறுப்பினர்களும் அந்த ஊருக்கு உண்டான ஆட்சிக்குழு முகவரைத் தேர்ந்தெடுத்து ஆட்சிக் குழுவிற்கு அறிவிக்கவேண்டும்.

(6) ஆட்சிக் குழு முகவரான ஒருவர் இறப்பதனுலோ அல்லது விட்டு நீங்குவதாலோ ஏற்படும் காலியிடத்திற்கு அந்தந்த ஊரிலிருந்து ஒரு முகவரை எடுத்துக்கொள்ளலாம். அவ்விதம் எடுத்துக்கொள்ளப்பெரும் ஒரு முகவர் அடுத்த ஆட்சிக்குழுத் தேர்வுவரை அலுவலாற்றுவார்.

(7) ஆட்சிக் குழுவினர் ஆறு மாதத்திற்கு ஒருமுறை யாகிலும் கூடவேண்டும்.

(8) ஆட்சிக்குழு கூட்டம் நடப்பதற்குக் குறைந்தது அயிந்து ஊர்களிலிருந்து உறுப்பினர்கள் வந்திருக்கவேண்டும். ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

(9) ஆட்சிக்குழுக் கூட்டத்தில் நாளையும், காலத்தையும் குறிப்பிட்டு ஐந்து நாட்களுக்கு முன்பாகவே உறுப்பினர்கள் அறியும்படி அறிவிப்பு அனுப்பவேண்டும்.

(10) ஆட்சிக் குழுவின் நடவடிக்கைகளை அதற்கெனத் தனியே ஒரு புத்தகத்தில் பதிவு செய்துவரவேண்டும்.

(11) ஆட்சிக் குழுவின் முன் வரும் பொருள்கள் முகவர் களின் பெரும்பான்மையான வாக்குகளால் முடிவு செய்யப் பெறும். வாக்குகள் ஒரே அளவாக இருந்தால் தலைவருக்கு தனி வாக்கு உண்டு. அதைக்கொண்டு முடிவு செய்ய வேண்டும்.

ஆட்சிக் குழுவின் அதிகாரங்கள் :

(12) ஆட்சிக் குழுவினர் ரு 500க்கு உள்பட்ட துகையை பொதுச் சபையின் முன் அனுமதியின்றி செலவு செய்யலாம். அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தில் அதற்கு அனுமதி பெற வேண்டும்.

(13) பொதுச் சபைக் கூட்டங்களை கூட்டுவதும் அதில் முடிவு செய்ய வேண்டிய பொருள்களை அறிக்கையில் எழுதி அனுப்புவதும்.

(14) பொதுச் சபையார் முடிவுகளை ஒட்டி அவைகளைக் கொண்டு செலுத்துதல்.

(15) பணம் சொத்து யாவற்றையும் கவனிக்கவும் கடன் கொடுக்கவும், அதை வசூலிக்கவும், சொத்துக்கள், பங்குகள், கவர்மெண்டு பத்திரங்கள் வாங்கவும், அவைகளை விற்கவும் அதிகாரமுண்டு.

(16) இந்த படைப்பு பங்காளிகள் ஏற்கெனவே இதன் சார்பாகச் சேர்த்து வைத்துள்ள சொத்துக்களையும் கையிருப்பு பணங்களையும் மேற்பார்க்கவும், சொத்துக்களை இந்தச்சபையின் நன்மைக்காக விற்கவும், வாங்கவும், மாற்றிக் கொள்ளவும் அதிகாரமுண்டு.

(17) இந்தச் சபைக்காக பணத்தைக் கொடுத்து வாங்கவும் முதலீடு செய்யவும், பாங்குகளில் கணக்கு திறக்கவும், அவைகளை போட்டு வைக்கவும், எடுக்கவும், மாற்றவும், அதிகாரம் உண்டு.

(18) இந்தச் சபைக்கு வரவேண்டிய பணங்களை வசூலிக்கவும் இந்த சபையின் பணங்களை பெருக்கவும் இந்தச் சபையின் உரிமைகளை பாதுகாக்கவும் அதிகாரம் உண்டு.

(19) பொதுச் சபையிலும் ஆட்சிக் குழுவிலும் இதில் கண்டதற்கு மாறுபாடு இல்லாமலும் 1860ம் வருஷத்திய சொசைட்டி ஆக்ட்டு XXIக்கு மாறுபாடில்லாமலும் எல்லாச் செயல்களும் முடிவு செய்ய வேண்டும்.

VI. தலைவர்.

ஆட்சிக் குழுவிலும் பொதுச் சபையிலும் தலைமை அமரவும் ஆட்சிக் குழு முடிவுகளையும் பொதுச் சபை முடிவுகளையும் நிறைவேற்றி வரவும் வேண்டும்.

துணைத் தலைவர்.

தலைவர் இல்லாத காலங்களிலும், மற்ற காலங்களிலும் தலைவருடன் சேர்ந்தும் மேலேகண்ட இரண்டு சபைகளின் கூட்டங்களில் தலைமை அமரவும், முடிவுகளை நிறைவேற்றவும் வேண்டும்.

VII. செயலாளர்.

(1) சபையின் எல்லா வரவு செலவுக் கணக்குகளேயும் அதற்குறிய சான்றுகளேயும் பத்திரம், தாள்களேயும், ஆட்சிக் குழு அமர்த்தும் பணி ஆட்களேக்கொண்டு அவ்வப்போது சரிவர எழுதி அவற்றை தன் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளவும், அவைகளே ஆட்சிக்குழுவில் எந்த உறுப்பினரும் அலுவலக நேரத்தில் பார்வையிட வேண்டுமென்று விரும்பும்போது காண்பிக்கவும்.

(2) ஆட்சிக்குழு கூட்டங்களேக் கூட்டவும் முடிவுகளேத் தலேவரைக் கலந்து கொண்டு செய்யவும்.

(3) நீதிமன்றங்களிலும், அறமன்றங்களிலும், பதிவு நிலயங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் சபையின் சார்பாக எல்லா நடவடிக்கைகளேயும் எடுத்துக்கொள்ளவும், நடத்தவும், பதில் செய்யவும், திரும்பப் பெறவும் அதிகாரமுண்டு.

(4) பணங்களே சபையின் பேரால் ஆட்சிக்குழுவினுல் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் வைத்துக்கொள்ளவும்.

(5) பொதுச்சபை, ஆட்சிக்குழு, முடிவின்படி பணம் கொடுக்கல், வாங்கல், அஞ்சல் நிலேயங்கள், வங்கிகள் இவைகளில் சபையின் பெயரால் பணம் போடவும் எடுக்கவும், சேமிப்புப் பத்திரம், பங்குகள், வாங்கவும் விற்கவும் உரிமையுண்டு. மேல்கண்டபடி செய்வதற்கு போதுமான சான்றுகள் வாங்கிக்கொள்ளவேண்டும். வங்கிகளிலிருந்தோ அஞ்சல் நிலேயங்களில் இருந்தோ பணம் பெறுவதற்கும் இதர வகைகளில் பணங்கள் பெறுவதற்கும் செயலாளர் கையொப்பத்துடன் தலேவருடைய கையொப்பமோ அல்லது துணேத்தலேவருடைய கையொப்பமோ இருக்கவேண்டும்.

(6) தன் கையில் ரூ 100/-க்குள் ரொக்கம் இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

(7) ஆட்சிக் கூட்டங்களுக்கு வரும் முகவர்களுக்கு வந்து போவதற்கான பிரயாண செலவை சான்று வாங்கிக் கொண்டு கொடுக்கலாம்.

(8) நடைமுறையில் வழக்கமாக ஏற்படும் செலவுகளைச் செய்து அவைகளுக்குப் போதுமான சான்றுகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

VIII. இந்த சபையில் சேரும் உறுப்பினர்கள் யாவரும் மேலேகண்ட விதிகட்கும் பொதுச்சபையாரால் அவ்வப்போது ஏற்படுத்தப்பெறும் சட்டதிட்டங்கட்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள். இதில் காணுத விதிகட்கு சொசைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் 1860ம் வருடத்திய ஆக்டில் உள்ள விதிகள் பொருந்தும்.

இது "அழகஞ் செட்டியார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபை (பள்ளத்தூர்)" யின் விதிகளுக்குச் சரியான நகல் (Correct Copy) என்று சர்ட்டிபை செய்கிறோம்.

கையொப்பம். பதிவு. தேதி.

1. சொ. மு. அ மெ ராம. ராமசாமி செட்டியார், தலைவர், 6—7—1960.

2. ருமெ. செ. செல்லப்ப செட்டியார், உறுப்பினர். 6—7—1960.

3. சொ. வி. சொ. சொக்கலிங்கம் செட்டியார், காரிய தரிசி, 6—7—1960.

சாட்சிகள்.

1. S. M. A. M. AR. Ramaswamy son of Arunachalam Chettiar, Banker, Pallatur, 6—7—1960.

2. S. A. RM. Kadiresan son of Ramanathan Chettiar, Banker, Pallatur, 6—7—1960.

இடம்: பள்ளத்தூர். தேதி: 6—7—1960.

ஜெயபால் அச்சகம், பத்தாய்க்கடைத் தெரு, திருச்சி-2.

அழகஞ் செட்டியார் காளியார் பொதுப்படைப்பு பரிபாலன சபையின் முதலாவது செயற்குழு உறுப்பினர்கள்.

தலைவர் :

சொ. மு. அ. மெ. ராம. ராமசாமி செட்டியார், பள்ளத்தூர்.

துணைத்தலைவர்கள் :

அழ. சுப. சுப்பையா செட்டியார், கடியாபட்டி.
ராம. செ. செல்லப்ப செட்டியார், கொத்தமங்கலம்.

செயலாளர் :

சொ. வி. சொ. சொக்கலிங்கம் செட்டியார்,
அழ. ராம. சத்திரம், விசாரணைதார், பள்ளத்தூர்.

உறுப்பினர்கள் :

மு. அ. அருணாசலம் செட்டியார், பள்ளத்தூர்.
மு. மு. சொ. மு. ராமனாதன் செட்டியார், ,,
சொ. அழ. அழ சோ. அழகப்ப செட்டியார், ,,
உ. மு. உ. மு. முத்துவீரப்ப செட்டியார், கடியாபட்டி.
முரு. க. அருணாசலம் செட்டியார், பலவான்குடி.
வீர. சிதம்பரம் செட்டியார், கோட்டையூர்.
அ. சு. பழ. வீர. ராமசாமி செட்டியார், புதுவயல்.
அழ. கரு. காசி விஸ்வநாதன் செட்டியார்,
தேவகோட்டை, காரைக்குடி.